www.tamilarangam.net

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின்
# மத்திய குழு அறிக்கை

கடந்த பிப்ரவரி 19 முதல் 24 தேதி வரை யாழ்ப்பாணம் கந்தரோடையில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் முதலாவது மாநாடு நடைபெற்றது. அவ்வமயம் அம்மாநாட்டில் ஈழத்தின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள், மலையகம் உள்ளிட்ட அனைத்துப் பகுதி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

**இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டின் நோக்கங்கள் பின்வருமாறு இருந்தன:**

1. தோழர் முகுந்தன் கடைப்பிடித்துவரும் எதேச்சதிகார, அராஜக நடவடிக்கைகளை நிராகரித்து உட்கட்சி ஜனநாயகத்தை நிலைநாட்டுவது.
2. தோழர் முகுந்தனின் தலைமையில் கழகத்துள் நடைபெற்ற கொலைகளை விசாரணை செய்வதற்கும் அதன்மீது நடவடிக்கைகள் எடுப்பதற்குமான அமைப்புகளை ஏற்படுத்துதல்.
3. கழகத்தைச் சீர்குலைவுப் பாதைக்குக் கொண்டு சென்ற தோழர் முகுந்தனின் மூலஉபாயம் (Strategy) அற்ற அரசியல், இராணுவப் போக்குகளைக் கண்டிப்பதும், சரியான அரசியல், இராணுவ மூலஉபாயத்தை வகுப்பதற்கான அடிப்படையை உருவாக்குதல்.

இம்மாநாட்டின் தீர்மானங்களில் மிகவும் முக்கியமானது தோழர் முகுந்தனால் இரகசியமாக உருவாக்கப்பட்டு உட்கொலைகளுக்கும், கொள்ளைகளுக்கும் பயன்படுத்தப்பட்ட உளவுப்படையினரை பற்றி ஆராய்வதும் அவற்றிற்கு சரியான தீர்வு காண்பதுமாகும்.

மேலும் ஈழத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில் கலந்துகொள்ள வாய்ப்பு இல்லாமல் ஈழத்துக்கு வெளியே இங்கு தங்கி இருந்த கழகத் தோழர்களின் மாநாட்டை நடத்துவதாகவும் முடிவு செய்யப்பட்டது

ஈழத்துள் நடைபெற்ற இந்த மாநாடு தெரிவு செய்த தலைமை ஆட்சிக் குழுவுடன் ஈழத்துக்கு வெளியே இங்கு நடைபெறவிருக்கும் மாநாடு தெரிவு செய்யும் ஆட்சிக் குழு இணைந்து கழகத்துக்கான புதிய தலைமையை உருவாக்குவது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஈழத்து மாநாட்டை முறியடிக்க தோழர் முகுந்தனால் எடுக்கப்பட்ட சதி முயற்சிகள் அனைத்தையும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் ஈழத்து மாநாடு முறியடித்தது.

பூரண வெற்றியுடன் நடைபெற்ற ஈழத்து மாநாட்டை மத்திய குழுவின் பெரும்பான்மையினரும் வெளிநாட்டுக் கிளைகளும் ஒருமனதாக ஏற்றுக்கொண்டமையால், தோழர் முகுந்தன் வேறு வழியின்றி ஏற்றுக்கொண்டார். ஈழத்து மாநாட்டின் நோக்கங்களுக்கு விரோதமாக நடைமுறையில் செயல்பட்டு வந்த தோழர் முகுந்தன், உளவுப்படையை மீண்டும வலுப்படுத்தி, தனது ஆதரவாளர்களைக் கொண்டு சர்வாதிகார முறையில ஈழத்துக்கு வெளியில் இங்கு நடைபெறவிருந்த மாநாட்டைத் தனக்குச் சாதகமாக நடத்த முனைந்தார்.

இந்த மாநாடு முற்றிலும் ஜனநாயகமான முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்த விழைந்து தற்போது இங்கு இருக்கும் ஈழத்துக் கழகச் செயற்குழுவினரையும், பெரும்பான்மை மத்தியக் குழுவினரையும் (தனது கீழ்த்தரமான திட்டங்களுக்கு எதிராக இருப்பதால்) தோழர் முகுந்தன் கொலை செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளார்.

தோழர் முகுந்தன் இதற்கு முன்னர் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் வளர்ச்சிக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் உழைத்துள்ள தோழர் சந்ததியாரைக் (வசந்தன்) கொலை செய்தது அனைவரும அறிந்ததே இது உட்பட 38 கொலைகளுக்குத் தோழர் முகுந்தன் பொறுப்பு ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில், ஜூலை 19 அன்று நடைபெறவிருந்த மாநாட்டில் கலந்துகொள்வது தோழர் முகுந்தனது அராஜக வாதத்துக்குத் துணைபோவதாக அமையும் என்பதால், தமிழ்நாட்டில் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுவதைத் தவிர்ப்பதற்காக நாங்கள் மாநாட்டு ஏற்பாடுகளிலிருந்து விலகிக்கொள்வதுடன், ஜனநாயக ரீதியாக மாநாடு ஒன்றை நடத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

மேலும் இங்கு நடைபெறும் மாநாட்டிற்குப் பேராளர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட 187 பேராளர்களுனுள் 155 பேராளர்கள் மாநாட்டு ஏற்பாடுகளை நிராகரித்து வெளியேறியுள்ளனர். தோழர் முகுந்தனோடு எஞ்சியுள்ள 32 பேராளர்களில் பெரும்பான்மையோர் தோழர் முகுந்தனின் நேரடிக்கட்டுப்பாட்டினுள் இருக்கும் உளவுப் பிரிவின் உறுப்பினராவார்கள். இவர்கள் கழகத் தோழர்கள் மத்தியிலிருந்து ஜனநாயக ரீதியில் பேராளர்களாகத் தெரிவு செய்யப்படாமல் தோழர் முகுந்தனின் நேரடி சிபாரிசின் பேரில் மாநாட்டு பேராளர்களாகத் தெரிவு செய்யப்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டவர்களாவர். அத்தோடு தோழர் முகுந்தனுடன் எஞ்சியுள்ள ஐந்து மத்திய குழு உறுப்பினர்களில் ஒருவரும் உளவுப்பிரிவின் தலைவருமான தோழர் கந்தசாமியும் இப் போராளர்களில் ஒருவராவர்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தள செயற்குழுவும் கழக மத்திய குழுவின் பெரும்பான்மையினராகிய நாமும் இப் பின் தள மாநாட்டை ஜனநாயக ரீதியில் நடத்துவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இவ் வேளையில் தோழர் முகுந்தன் தனது உளவுப் பிரிவினரின் ஆதரவுடன் போலித்தனமான மாநாடு ஒன்றை நடாத்தி தன்னை மீண்டும் செயலதிபராக நிலை நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகின்றது.

ஈழத்தில் நடந்த தள மாநாட்டின் தீர்மானங்களின் அடிப்படையிலேயே இங்கும் மாநாடு ஒன்றை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மேற்படி தீர்மானங்களின்படி தளச் செயற் குழுவினரின் முன்னிலையிலேயே இம்மாநாடு நடைபெறல் வேண்டும் அத்தோடு இம்மாநாட்டின் போராளர்களாக தோழர்கள் மத்தியிலிருந்த ஜனநாயக ரீதியில் செய்யப்பட்ட தோழர்களே பங்கு பெறல் அவசியம் இவ்விரண்டு விதிகளுக்கும் மாறாக நடைபெறுகின்ற எந்தவொரு மாநாடும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மாநாடாக அமைதல் இயலாது எனவே மேற்படி விதிகளுக்கமைய தளச் செயற் குழுவும் பெரும்பான்மை மத்திய குழு உறுப்பினர்களாகிய 10 அங்கத்தவர்களும் சேர்ந்து கழக மாநாட்டை நடாத்த தீர்மானித்துள்ளோம். இம்மாநாட்டில் கழகம் பற்றிய அனைத்து பிரச்சனைகளும் ஆராயப்பட்டு ஜனநாயக மத்தியத்துவம் வாய்ந்த கூட்டுத் தலைமை உருவாக்கப்பட்டும். அத்தோடு கழகத்தின் விமர்சனம் சுயவிமர்சனம் மற்றம் அரசியல், இராணுவ மூல உபாயங்கள் விஞ்ஞான பூர்வமான விவாதங்களினூடாக தீர்மானிக்கப்படும்.

மேலும் கழகத்தின் தோழர்களினாலும் அனைத்து அங்கங்களினாலும் குற்றச் சாட்டுக்களுக்கு உள்ளாக்கப்பட்ட மத்திய குழு உறுப்பினர்களாகிய தோழர்கள் முகுந்தன், கண்ணன், வாசுதேவா, கந்தசாமி, மாணிக்கதாசன் ஆகியோர் பெரும்பான்மை மத்திய குழு உறுப்பினர்களின் முடிவின்படி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திலிருந்து தற்காலிகமாக இடை நிறுத்தம் செய்யப்படுகின்றனர். நடைபெற இருக்கும் கழக மாநாட்டில் இவர்கள் சுதந்திரமான முறையில் கலந்துகொண்டு தங்கள் மீதான குற்றச் சாட்டுகளுக்கும், விமர்சனங்களுக்கும் விளக்கம் அளிப்பதற்கு சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.

அரசு விடுதலை அமைப்புக்கள் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய தொடர்புகள் அனைத்தையும் கழக மத்திய குழு [illegible] மேற்கொள்ளப்படும் அல்லது புதுப்பிக்கப்படும் தொடர்புகளுக்கு மாத்திரமே தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் பொறுப்பாகும். ஏனையதொடர்புகள் யாவும் திரு. முகுந்தன் என்ற தனி நபரினோடு ஏற்படுத்திக் கொண்ட உறவுகளாகவே கணிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம் கழகத்தின் பெயரிலோ அல்லது கழகத்தின் செயலதிபர் எனும் உறவிலோ யாருடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் திரு முகுந்தனை பணிக்கின்றது.

கடந்த காலந் தவறுகளை நிவர்த்தி செய்து தமிழ் பேசும் மக்களின விடுதலையை வென்றெடுக்க இறுதிவரை எம் தாயகத்து மக்களுக்கு உறுதி கூறுகின்றோம்.

மத்திய குழு உறுப்பினர்கள் :

தோழர்கள் : ஈஸ்வரன்
(தள நிருவாகச் செயலர்)
ராஜன் (ஞான சேகரம்)
குமரன்
[redacted]
அசோக்

தோழர்கள் : சேகர்
செந்தில்
பாபுஜீ
ஆதவன்
முரளி

கழகத்தின் அனைத்துத் தொடர்புகளுக்கும்:
இல. 3,4ம் குறுக்குத்தெரு:
வ. உ.சி. காலனி, வடபழனி
சென்னை-26.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்